ஐ.தே.க. எம்.பி.க்களிடம் ராஜினாமா கடிதங்களை

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 22 இதழ் 84
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-5-1994

டி.பி. பெற முயற்சி

(கொழும்பு)

ஐ. தே. க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் திகதியிடப்படாத ராஜினாமா கடிதங்களை பெற்றுக்கொள்ள ஜனாதிபதி விஜேதுங்க நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்புகளையும் எதிர்வரும் நாட்களில் கட்சித்தலைமைப் பதவியில் ஏற்படும் சவால்களையும் சமாளிக்கும் விதத்தில் அவர் இந்த ராஜினாமா

(6-ம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. விரைவில் பிளவுற்றுவிடும்!

(கொழும்பு)

ஆளும் ஐ. தே. க. எதிர்வரும் தேர்தல்களிற்கு முன்பே பிளவடைந்து விடுமென பொதுசன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

ஐ. தே. க வின் அதிகாரப் போட்டி உச்சநிலைக்கு வந்துவிட்டது. இரண்டிற்கும் மேற்பட்ட குழுக்கள் ஆட்சியை கைப்பற்ற போட்டி போடுகின்றன, பதவி நீக்கங்களும் இடம்பெறுகின்றது.

(6-ம் பக்கம் பார்க்க)

● ஒழுக்காற்று நடவடிக்கை

ஐ.தே.க. எம்.பிக்கள் ஏழு பேரை கட்சியிலிருந்து நீக்க முயற்சி!

நீதிமன்று செல்வதாக அவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

கட்சிவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதாக ஆளும் ஐ. தே. க. விலிருந்து ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களை நீக்க கட்சித் தலைமைப்பீடம் முயற்சி செய்துவருகிறது. இதன் மூலம் கட்சிக்குள் நெருக்கடி நிலை அதிகரிக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து நீக்கப்படவுள்ள ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அடுத்த தேர்தல் வரும்வரை தம்மை கட்சியில் இருந்து நீக்கமுடியாது என்று அறிவித்துள்ளனர்.

ஒரு உறுப்பினரை கட்சியில் இருந்து நீக்குவதற்கு முதலில் குற்றப்பத்திரிகை தயாரிக்க வேண்டும். அதன்பின் கட்சி விசாரணை செய்யவேண்டும். அப்படியான ஒரு நடவடிக்கையும் எம்மவர் மீது எடுக்கப்படவில்லை. அப்படி எம்மை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் நாம் நீதிமன்றத்தை நாடுவோம் என்றும் அத்த ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்

(5-ம் பக்கம் பார்க்க)

படை நடவடிக்கை மந்த நிலையிலாம்

(கொழும்பு)

வடபகுதியில் யாழ் குடாவின் மேற்கொள்ளப்பட ஏற்பாடாகியுள்ள இராணுவ நடவடிக்கையில் சிறிது மந்த நிலை காணப்படுவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

'மே' முற்பகுதியில் தாக்குதல் ஆரம்பிக்கப்படுமென கூறப்பட்டுள்ள போதிலும் தாக்குதல் மையம் யாழ் குடாநாட்டிற்கு வெளியே அமையும் எனவும் கூறப்படுகின்றது.

எனினும் யாழ். குடாநாட்டைத் தாக்கக்கூடிய விதத்தில் படையினர் சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுவிட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

சமரச பேச்சுக்கு முயற்சி;

தமிழ் அதிகாரி — புலிகள் சந்திப்பு?

(கொழும்பு)

அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம் என்று விடுதலைப் புலிகள் மீண்டும் அரசுக்கு அறிவித்துள்ளனர்.

அண்மையில் வடபகுதிக்கு வந்த அரச உயர் தமிழ் அதிகாரி ஒருவர் விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்திவிட்டுக் கொழும்பு திரும்பி புலிகளின் மேற்படி விருப்பத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததாகவும், பிரதமர் இவ்விடயத்தை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிடம் விபரமாக எடுத்துக் கூறியதாகவும்

(6-ம் பக்கம் பார்க்க)

தனது கைகள் சுத்தமானவையாம்

டி. பி. கூறுகிறார்

(கொழும்பு)

அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமக்குள் சண்டையிடுவதை தவிர்த்து, ஜனாதிபதித்தேர்தல், பொதுத்தேர்தல்களில் ஐ. தே. க. வின் வெற்றிக்கு பாடுபடவேண்டும் என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தனது கட்சி உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தி

(6ம் பக்கம் பார்க்க)

பூநகரி தாக்குதல் சிப்பாய் பலி

(கொழும்பு)

பூநகரி வடமேற்குப் பகுதியில், இராணுவக் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன், இருவர் காயமடைந்ததாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் இத்தாக்குதலுக்கு இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

'சண்டே ஒப்சேவர்' ஆசிரியர் 'லேக்கவுஸ்' தலைவர் ராஜினாமா

(கொழும்பு)

"சண்டே ஒப்சேவர்" பத்திரிகை ஆசிரியர் திரு. மகிந்த பாலவும் "லேக்கவுஸ்" பத்திரிகை நிறுவன தலைவர் திரு. சுனில் ரொட்ரிகோவும் தமது ராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் 'லேக்கவுஸ்' பத்திரிகையான "சண்டே ஒப்சே

(6-ம் பக்கம்) பார்க்க

இராணுவ தாக்குதல் திட்டம் புலிகள் வசப் சிக்கியதாம்

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகள் சம்பந்தமான இலக்கைப் படையினரின் இலக்குகள் விடுதலைப்புலிகளிடம் சிக்கியுள்ளதாக 'ஹிரு' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இராணுவத் தலைமைப்பீடம் உள்ள இந்த இரகசிய திட்டங்கள் எப்படி விடுதலைப் புலிகளிடம் சிக்கியுள்ளது என்று படையினர் மத்தியில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாக 'ஹிரு' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

நிறுவனத் தலைவர்களும் பதவி விலகுவர்!

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் திணைக்களங்களின் தலைவர்கள் பலர் விரைவில் தமது பதவிகளிலிருந்து விலகுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக பி. பி. ஸி கூறியது.

எதிர்வரும் தேர்தலுக்குமுன் தனது [illegible] பலப்படுத்தும்

(6-ம் பக்கம் பார்க்க)

அக்கிரமம், அட்டூழியம் செய்தவர்கள் பயங்கரவாதம் பற்றி பேசுகிறார்கள்

குமார் பொன்னம்பலம் கண்டனம்

(கொழும்பு)

வடபகுதியில் நிலவுவது பயங்கரவாதம்தான், இனப் பிரச்சினையல்ல என்று ஜனாதிபதி விஜேதுங்க கூறுவதை ஐ.தே.க. வின் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்களோ அல்லது அரசுக்கு தலையாட்டும் தமிழ் அரச உத்தியோகத்தர்களோ ஏற்றுக்கொண்டு அதை மீண்டும் உறுதிப்படுத்துவார்களா? இதனை சவாலாக விட நான் விரும்புகிறேன் என குமார் பொன்னம்பலம் "சண்டே ரைம்ஸ்" க்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: 1956ம் ஆண்டு சிங்களம் மாத்திரம் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, நாடாளுமன்றம் முன் காலிமுகத்திடலில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியாக்கிரகம் செய்தனர். அமைதியாக இவர்கள் அங்கு கூடி இருக்கையில் நூற்றுக்கு மேற்பட்ட பொலிஸாரின் முன்னிலையில் குண்டர்களால் தாக்கப்பட்டனர். தாக்கிய ஒருவரைத்தானும் பொலிசார் கைது செய்யவில்லை. 'சிங்கள ஸ்ரீ' எதிர்ப்பு இயக்கம் வடகிழக்கில் ஆரம்பிக்கப்பட்டபோது கூட எவரும் ஆத்திரமூட்டல் கூடிய செயலில் இறங்கவில்லை.

யாழ் பொது நூலகம், பொதுச்சந்தை, கூட்டணி தலைமைச் செயலகம், யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் இல்லம், பத்திரிகை காரியாலயம் இவைகள் 1981ல் எரிக்கப்பட்டது. யார் பயங்கரவாத செயல்கள் செய்ததால் பின்னர் இவைகள் கொளுத்தப்பட்டன?

ஆனால் யாழ். பொது நூலகம் எரிப்பதற்கு உடந்தையான பொலிஸ் அதிகாரிக்கு ஏரிக்கரை பத்திரிகையில் உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை மறியற்சாலையில் 1983ம் ஆண்டு 53 அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். இக்கொலையைச் செய்து முடிக்குமாறு மறியற்சாலை அதிகாரிகளே துணை போயுள்ளனர். இவர்கள் சட்டத்தின் முன் கொண்டுவரப்படவில்லை.

வடபகுதியில் பயங்கரவாதம் நிலவுவதாக பேசுபவர்கள் தென்பகுதியில் நிலவிய அக்கிரமங்களைப் பற்றி பேசாமல் விடுவது ஏன்?

ஐ.தே.கட்சியோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ தீர்வொன்றை முன்வைக்கும் பட்சத்தில் இப்போது பேசப்படும் "பயங்கரவாதம்" அல்லது "சண்டை நிறுத்தம்" என்பவை பேச வேண்டிய அவசியமிராது. அதை உடனடியாக இவர்கள் செய்ய வேண்டும்.

புலிகள் என்ன விடயம் பற்றி பேச உள்ளார்கள் என்பதை முன் கூட்டியே அறிய வேண்டும் என்று கேட்பவர்கள், முதலில் அவர்கள் தமிழர்களுக்கு என்ன வழங்க இருக்கிறார்கள் என்பதை தெரிவிக்கலாம் என்றும் அக்கட்டுரையில் தெரிவித்துள்ளார். -கே-பி

படிவங்கள் வரவில்லை

(மானிப்பாய்)

54ம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு எழுதி வழங்கப்படும் இருபக்க பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் படிவங்கள் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாகியும் பதிவாளர் திணைக்களத்திலிருந்து யாழ் பிறப்பு இறப்பு காரியாலயத்திற்கு வந்து சேராதபடியினால் இதனை பெறுவதற்கு விண்ணப்பம் செய்த வருபவர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். -71

புதினம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"புதினம்" என்ற பெயரில் புதிய செய்திப் பத்திரிகை ஒன்று வெளிவந்துள்ளது. பழம்பெரும் எழுத்தாளர் வரதர் இந்தச் செய்திப் பத்திரிகையின் பிரதம ஆசிரியராவார்.

முதல் இதழில் "தேர்தல் நெருங்கும்போது போரை உக்கிரப்படுத்துகின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கும் இல்லாது" என்ற தலைப்புச் செய்தியோடு தமிழ் அறிஞர் தாசன் ஆசிரியர் என்ற கவிஞர் சேரு பத்மநாதனின் கவிதையும், இறுதி யுத்தம் நீலவண்ணன், மலேசியா—டாக்டர் எம். கே. முருகானந்தன், பேர்லின் கவசி—அரவிந்தன், கிண்ணியின் ஒளி—கே. எம். இளமைச்சந்திரன் ஆகியோரது கவிதைகளும், "பொறுத்தது போதும்" என்ற சிறுகதையும் இடம்பெற்றுள்ளது.

தேசிய தலைவர் பிரபாகரன் அவர்களை அவர் இயக்கத்தை மட்டுமல்ல ஒரு நாட்டையே சிறப்பாக நிர்வகிக்கும் திறமை இந்தத் தலைவனுக்கு இருப்பது கண்டு திகைக்கிறோம்! வியக்கிறோம்! மகிழ்கிறோம் என்ற இந்த 'யுகபுருஷனை' வாழ்த்தும் ஆசிரியரது கருத்துக் கருவூலமும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளது. —உ

சிறிமா - ஜனாதிபதி சந்திரிகா - பிரதமர்

(கொழும்பு)

இலங்கையின் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதியாகவும், திருமதி சந்திரிகா குமாரணதுங்க பிரதம மந்திரியாகவும் இந்த வருடம் நியமனம் பெறுவார்கள் என்று 'உலக அரசியல் ஆரூடர்கள் குழுவினர்' தெரிவித்துள்ளனர்.

1994ம் ஆண்டு அவர்களது ஆண்டறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தகாலத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஐ.தே.க. வெற்றியைப் பற்றிய மாற்றத்தை கொண்டுவரலாமென்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ம-ி

திருநெல்வேலி சிவன் கோவில்

14—ம் திருவிழா

[5-5-94] இன்று

கைலாய வாகன

உற்சவ விஞ்ஞாபனம்

சிவநேயச்செல்வர்களே!

மாலை 5 மணிக்கு வசந்தமண்டப பூசையும் அதனைத் தொடர்ந்து மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட

★ கைலாய வாகனத்தில் ★

எம்பெருமான் எழுந்தருளி வீதிவலம் வருவார். அத்தருணம் அடியார்கள் அனைவரும் சமுகமளித்து தரிசனம் செய்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்வீர்களாக!

நிகழ்ச்சிகள்

மங்கள இசை

தேவஸ்தான ஆஸ்தான வித்துவான்

பாலசுப்பிரமணியம் குழுவினர்

கானவாரிதி வி. கே. கானமூர்த்தி

வி. கே. பஞ்சமூர்த்தி

விசேஷ தவில் வித்துவான்

கே. சிவகுமார்

தொடர்ந்து வழங்குபவர்—

கம்பன் கழக அமைப்பாளர்

திரு. ஜெயராஜ் அவர்கள்

வழங்கும்

★ மகாபாரதம் ★

சொற்பொழிவும் இடம்பெறும்.

விசேட ஒளி அமைப்பு: மனோ லைற் கோப்பாய்.

தேவஸ்தான ஒளி அமைப்பு: சண்முகலிங்கம் லோகேஸ் திருநெல்வேலி.

ஒலி: கண்ணா சவுண்ட் திருநெல்வேலி.

ஸ்ரீ காயா ரோஹண சுவாமி தேவஸ்தான 14-ம் திருவிழா உபயகாரர்

(ஏ-4062)

அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கான வெற்றிடம்

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் / கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சுகாதார நிறுவனங்களில் சேவை செய்வதற்காக அமைய சுத்திகரிப்புத் தொழிலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் பின்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

1. 18-40 வயதிற்குட்பட்ட எட்டாம் வகுப்பு (ஆண்டு 9) சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. தமது பிரிவிற்குரிய பிரதேச செயலாளர் / உ. அ. அதிபர் பிரிவில் கடந்த மூன்று ஆண்டுகளிற்கு குறையாமல் வசித்து இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் பின்னர் அறிவிக்கப்படும் திகதியொன்றில் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கும் செயன்முறைப் பரீட்சையொன்றிற்கும் தோற்ற வேண்டும்.
4. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி 20-05-94 வெள்ளிக்கிழமை
5. சம்பளம் நாளாந்த அடிப்படையில் நாளொன்றிற்கு 63/ ரூபாவும் வாழ்க்கைச் செலவுப்படியும் சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்தில் தயாரிக்கப்பட்டு 20-05-94 திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக (நேரிலோ அல்லது தபால் மூலமோ) அனுப்புதல் வேண்டும்.

வைத்தியகலாநிதி எஸ். விவேகானந்தன்
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
(சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்)

சுகாதார சேவைகள்-
மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
02-05-94.

அமைய சுத்திகரிப்புத் தொழிலாளி பதவிக்கான விண்ணப்பம் - 1994

1. முழுப்பெயர்:
2. தபால் விலாசம்:
3. (அ) பிரதேச செயலாளர் / உ. அ. அதிபர் பிரிவு:
   (ஆ) கிராமசேவையாளர் பிரிவும் இலக்கமும்:
4. பால்:
5. (அ) விவாகமானவரா / விவாகமாகாதவரா:
   (ஆ) பிள்ளைகளின் எண்ணிக்கை:
6. (அ) இலங்கைப் பிரஜையா:
   (ஆ) வம்சாவழியானவரா / பதிவு மூலமானவரா:
7. (அ) பிறந்த திகதி:
   (ஆ) தற்போதைய வயது:
8. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
9. கல்வித் தகைமைகள்:
10. தற்போதைய வன்முறையால் பாதிக்கப்பட்டவராயின் அதன் விபரம்:
11. ஜனாதிபதி அல்லது உணவு முத்திரைக்கு உரித்தானவராயின் அதன் விபரம்:
12. தொண்டர் சேவையில் இருந்தால் அதன் விபரம்:
13. பிற அனுபவங்கள்:

மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் சரியென நான் உறுதிசெய்கின்றேன்.

திகதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்.

(எ 4059)

JAFFNA TAMIL
Phonology
&
Morphology
by
Professor
S. Suseendirarajah

This work presents a descriptive grammar of Tamil Language as spoken in Jaffna. It is written according to the principles of modern synchronic linguistics.

Prof. R. E. Asher of the University of Edinburgh a renowned specialist in Tamil linguistics, says in his forewords: "I am confident this first volume...will be seen as a major contribution to the field of Tamil linguistics".

Price Rs. 175

For copies contact: Bursar]

Registrar
University of Jaffna
Jaffna.

(A 4061)

வடபகுதியை தாக்குவதற்கு வவுனியா - மன்னார் போர்!

(கொழும்பு)

மன்னார் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள படையினரின் முன்னெடுக்கப்படவுள்ள தீர்ப் பதற்கும் வடபகுதி யுத்த நடவடிக்கைகளில் அதிகமான தீவிரத்துடன் ஈடுபடுவதற்கும் அடுத்தடுத்த மாதங்களில் வவுனியா - மன்னார் போர் நடவடிக்கை ஆரம்பமாக வுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரின் கட்டுப் பாட்டிலுள்ள மன்னார் தீவை யும் மன்னார் மாவட்டத்தின் பெருநிலப்பரப்பின் ஒரு பகுதியையும் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலே படையினர் பரிபாலனம் செய்துவருகிறார்கள்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார் பிரதேசத்திலிருந்து சகஜ நிலைமையுள்ள நாட்டின் ஏனைய தென்பகுதிகளுக்கு தரைமார்க்கமான பாதைகள் எதுவுமே இல்லை. வடமையில் ஈடுபட்டுள்ள பல ஆயிரக்கணக்கான படையினருக்கு தேவையான அத்தியாவசிய பொருள் விநியோக பணிகளும் யுத்த நடவடிக்கைகளுக்கான விநியோகமும் சாதாரண இப்பாதைகள் தொடக்கம் படையினரின் கைகளுக்கு வரையிலான அனைத்து அத்தியாவசியமிக்க பிரயாணங்களும் கூட தாமதம் மிக்க விமான முயற்சியாகவும் பெரும் சுமையாகவுமே பாதுகாப்பு படையினருக்கு அமைந்துள்ளது என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (கி)

இலவச சீருடைகள் வழங்க நடவடிக்கை

(மானிப்பாய்)

வடபகுதியில் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு தற்போது மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மன்னார் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகளை விரைவில் வழங்கப்படவுள்ளதால் அதற்கான விபரங்களை உடன் தந்துதவுமாறு சகல கல்வி கோட்டங்களையும் இம்மாவட்ட கல்விப்பணிப் பாளர் கேட்டுள்ளார். (71-ரி)

சாம்பல் தீவைச் சேர்ந்த 400 தமிழ் குடும்பங்களும் தொடர்ந்து காட்டு வாழ்க்கை

(திருமலை)

திருகோணமலை மாவட்டத் தில் சாம்பல்தீவுப் பகுதியி லிருந்து சிறிலங்கா படை நடவடிக்கைகளால் வெளி யேறிய சுமார் 400 குடும்பங் கள் தற்பொழுதும் காடுக ளிலே வசித்து வருகின்றன.

எதுவித மருத்துவ சுகா தார வசதிகளுமின்றி மர நிழல்களில் குடிசைகளில் வாழ் கின்றனர். இதனால் பலமக்கள் பல்வேறு நோய்களின் தாக் கத்திற்கு ஆளாகியிருக்கின்ற னர்.

தமக்கு தேவையான உணவுப்பொருட்களை பெரு மதியிலேயே இவர்கள் பெறும் துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

காட்டிலுள்ள மரங்களை வெட்டி வெளிக்கிராமங்க ளுக்கு சென்று விற்றே அவர்கள் தேவைகளை இவர்கள் நிறை வேற்றுகின்றனர். -கி

பொலிஸ் - ராணுவம் மோதல் ஒருவர் பலி; 9 பேர் காயம்

(கொழும்பு)

முந்தல் சமலிக விளையாட் டரங்கில் கடந்த வாரம் பொலிசாருக்கும் இராணு வத்தினருக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் பொலிஸ்காரர் ஒருவர் பலி யானார் ஒன்பது இராணுவத் தினர் காயமடைந்தனர்.

முந்தலில் சம்பவம்

மேற்படி அரங்கில் இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாருக்கும் நிகழ்ச்சியை ரசிப்பதற்கு இங்கு வந்த ராணுவத்தினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இம் மோதலின் போது பொலிஸ்காரர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி மரண மானார் ஒன்பது ராணுவத் தினர் அடிக்காயங்களுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். -கி

வேலி தீமூட்டி எரித்து ஆடுகள் திருட்டு

(நெல்லியடி)

ஆட்டுப்பட்டியின் வேலியைக் கொளுத்திய திருடர்கள், அங்கு நின்ற இரண்டு செம் மறி ஆடுகளை களவாடிச் சென்ற சம்பவம், கடந்த வாரம் புலோலி கிழக்கை நகர வூ வளநாமரைக்குளத்தடியில் இடம்பெற்றது.

இதுபற்றி ஆட்டுப்பட்டியின் உரிமையாளர் கணபதி பிட்டி வர் வருத்தித்துறை தமிழீழ காவல்துறையில் புகாரிட்டுள் ளார். —160

பொருள் விநியோகத்திற்கு உணவு முத்திரை விபரம் சங்கம் கோருகிறது

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களின் உணவு முத்திரைக்கு வேண் டிய பொருட்களை வழங்கு வதற்கு யாழ் பல நோ. கூ. ச. தலைமை நிலையில் இருப்ப தாகவும் ஆறு பாடசாலை அதிபர்களிடமிருந்து உணவுப் பொருட்களை வழங்குவதற்கு வேண்டிய விபரங்கள் இன் னும் தமக்கு கிடைக்கவில்லையென்று மேற் படி சங்கத்தின் அதிகாரி தெரிவித்தார்.

யாழ் பல நோ. கூ. சங்கத் தின் எல்லைக்குள் இருக்கும் 87 பாடசாலைகளில் 16 பாட சாலைகளின் அதிபர்கள் மட் டுமே தமது விபரங்களை அனுப்பியுள்ளார்கள். —வி

மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். செட்டித்தெரு மெ. மி. த க. பாடசாலை, ஆனைக்கோட்டை மெய்வல்லுனர் போட்டி மைதானத்தில் நடைபெறும். இணைந்து நடாத்தும் பெருவிழாவிற்கான மெய்வல்லுனர் போட்டி எதிர் வரும் 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மேற்படி பாடசாலை மைதானத்தில் நடைபெறும். -162

'செல்லாவின் செல்வாக்கு ஐ. தே. கவுக்குள் சரிவு

(கொழும்பு)

தொண்டமான்விஜேதுங்கா உறவு நெருக்க ஐ. தே. வுக் குள் செல்லச்சாமிக்கு எதி ராக காற்று வீசத்தொடங்கி யுள்ளது என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித் துள்ளது.

தனக்கும் மத்தியமாகாண சபை உறுப்பினர் எட்டுப் பேருக்கும் எதிராக தொண்ட மான் தலைமையிலான இ. தொ. காவின் தேசிய சபை முடிவுகள் சட்டபூர்வமற்றது என்றும் அது தொண்டமா வின் தனிப்பட்ட முடிவு என் றும் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

செல்லச்சாமியை விட தொண்டமானே சக்திமிக்க வர் என நம்பும் ஐ. தே. கவி னர் தற்போது செல்லச்சாமி யின் கோரிக்கைக்கு செவி சாய்ப்பது இல்லையாம்.

செல்லச்சாமி அரசியல் அந்தஸ்தையும் எதிர்காலத் தையும் இழந்து விட்டார் என்று தொண்டமான் கூறி வருகிறாராம். (கி)

தென்மராட்சியில் இலக்கிய முயற்சி

(யாழ்ப்பாணம்)

அறவழி இலக்கியப்பேரவை நடத்தும் இலக்கியச் சொற் பொழிவுத் தொடர் எதிர் வரும் 8ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் தென்மராட்சியில் இலக்கிய முயற்சியில் ஒரு நோக்கு என் னும் தலைப்பில் திரு. அ. பொ. செல்லையா சொற்பெருக் காற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறவழிப் பணி மனையில் நடைபெறவுள்ளது. இலக்கிய ஆர்வலர்கள் இந் நிகழ்வில் கலந்து கொள்ள லாம். -கி

உயர் நீதிமன்றில் ரூபா 2 கோடி கையாடல்

(கொழும்பு)

ஒரு கோடியே 90 லட்சம் ரூபா உயர்நீதிமன்றத்தில் கையாடப்பட்டதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இதில் இலங்கையின் உயர் நீதிமன்றப் பதிவாளரும் நீதிமன்றசேவை ஆணைக்குழுவின் செயலாளர் லால் பீரிஸ் சம்பந்தப்பட்டுள்ளார் என் றும் கூறப்படுகிறது.

இவர்களை இதுவரை பொலிசார் கைது செய்ய வில்லை என்று பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகின்றது. (ம-கி

வெங்காயச் செய்கை பெருமளவில் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திற்கிளை வெங்காயத்தில் விலை முன் எப்போதுமில்லாதவாறு அதி கரித்துள்ளது. திருநெல்வேலி, சுன்னாகம், சங்கானை சந்தைக ளில் ஒரு கிலோ வெங்காயம் 50 ரூபா தொடக்கம் 60 ரூபா வரை தரத்தைப் பொறுத்து விற்பனையாகின்றது; கடந்த கால மாதத்தில் அடிக்கடி பெய்த மழையினாலும் பூச்சித் தாக்கத்தினாலும் வெங்காயம் செய்கை பண்ணப்பட்ட பல காணிகளில் இராணுவ நடவ டிக்கை காரணமாக கைவிடப் பட்டுள்ளதாலும் வெங்காயச் செய்கை பெருமளவில் பாதிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது -72

விடுதலை கோரும் பூஸா கைதிகள்

(கொழும்பு)

தம்மை உடனடியாக விடு தலை செய்யுமாறு பூஸா தடுப்பு முகாமில் உள்ள கைதிகள் அரசுக்கு கோரிக்கை விடுத் துள்ளனர்.

இதுவரை தங்கள் மீது எது வித குற்றப்பத்திரமும் தாக் கல் செய்யவில்லை என்றும் தாங்கள் கடந்த பல வரு டங்களாக நீதிமன்ற விசா ரணை எதுவுமின்றி சிறையில் வாடுவதாகவும் கூறியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் ஜனாதிபதி விஜேதுங்காவிற் கும், மனித உரிமைகள் அமை ப்புகளுக்கும் கடிதங்களை அனுப்பியுள்ளனர். இதில் தங்கள் மிக மோசமான நிலையில் இருப்பதாகவும் தம்மை மீட்குமாறும் குறிப்பிட் டுள்ளனர். -கி

சத்துணவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஜே.ந. அ.மி. வித்தியாலய மாணவர்களுக்கு கிழமையில் இரண்டு நாட்கள் சத்துணவு வழங்கப்பட்டு வரு வதாக இப்பாடசாலை அதிபர் பூரணம் தெரிவித்தார். -162

சிறுகதை தொகுதி அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

மட்டுநகர் எழுத்தாளர் அன்புமணி எழுதிய 'இங்கேத் தரசி' என்ற சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா இம் மாதம் 8ம் திகதி ஞாயிறுக் கிழமை பிற்பகல் 4-30மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இடம்பெறும். ம

தென்னையில் ஏற்படும் தண்டுகசிவு நோயை தடுக்க அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பரவ லாக தென்னைகளில் தண்டு கசிவு (Stem bleeding) நோய் தற்போது பரவி வருகிறது.

இந்நோயின் ஆரம்ப அறி குறிகள் தண்டிலே நீளப்பா டான வெடிப்புகள் தோன்றி அதிலிருந்து துரு நிறமான தண்ணீர்த் தன்மையான திர வம் கசிந்து காணப்படும். இந் நோயினை உடன் கட்டுப்படுத் தாவிடில், தென்னைமரம் பல் சுகவீனம் தாக்கப்பட்டு படிப் படியாக விருத்தி குன்றும் என்றும் இந்நோய் காணப்பட் டால் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர் உடன் தொடர்பு கொள்ளு மாறு பொதுமக்கள் வேண் டப்படுகின்றனர்.

தண்டு கசிவு நோய் பங்கசு வினால் ஏற்படுகின்றது. பாதிக்கப்பட்ட கபில நிறப் பகுதிகளை (துரு நிறம் கொண்ட பகுதி) கூரிய உளி அல்லது கத்தியினால் வெட்டி எடுத்தல் வேண்டும். ஆரோக் கியமான இளம் வெள்ளைநிறம் தெரியும்வரை அகற்றவேண் டும். பின்பு அப்பகுதிக்கு "போடோ கலவை" பங்கசு நாசினியைத் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம் என்று யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தி யோகத்தர் திரு. க. சத்தி யேந்திரன் தெரிவித்துள்ளார். -கி

ஆயுதம் ஒப்படைப்பது பற்றி

சமாதானத்தின் பின் சிந்திக்கலாம்

(திருமலை)

இனத்தின் உரிமைக்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் இளைஞர்களிடம் ஆயுதங்களை கீழே போடுமாறு கோர முடியாது. இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஏற்பட்ட பின்னர்தான் அது பற்றி சிந்திக்க முடியும்.

இவ்வாறு கடந்த வாரம் திருமலையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிச் சபையின் மூன்றுநாள் கருத்தரங்குக் கூட்டத்தில் தலைவர் சிவ சிதம்பரம் கூறினார். அவர் இக் கூட்டத்தில் மேலும் உரையாற்றுகையில்:

ஆயுதப் போராட்டம் சமாதானத் தீர்வுக்கு ஒரு உந்து சக்தியாக இருக்கிறது. இந்த நிலையில் ஆயுதம் ஏந்திப் போராடும் இளைஞர்களை ஆயுதங்களைக் கீழே போடுமாறு நாம் கோர முடியாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு விடுதலைப்புலிகள் தேசிய நீரோட்டத்திற்கு வந்தால், நாம் அவர்களோடுசேர்ந்து நிற்போம். அடுத்து வரும் தேர்தல்களில் எமது கட்சி போட்டியிடுவதுபற்றி நாம் இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் கூறினார். வி-டி

தேர்தல் முடிவு கேட்டு 250 ஓடுகள் உடைப்பு

(கொழும்பு)

தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை கேட்டுக் கொண்டிருந்த ஏககலை வாசி ஒருவர் 250 ஓடுகளை உடைத்து வெற்றியைக் கொண்டாடியுள்ளார்.

தென்மாகாணசபை தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்ற செய்தி கேட்ட இந்த நபர் கடைகளில் பட்டாசு கிடைக்காததால் தன் வீட்டுக்கு போடவைத்திருந்த 250 புதிய ஓடுகளை வீதியில் ஒவ்வொன்றாக உடைத்து சந்தோசம் கொண்டாடினாராம்.

இதேவேளை தேர்தல் குறித்து பந்தயம் பிடித்து தோல்வியடைந்த பல மொட்டையடித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

டி. பிக்கு எதிரானவர்கள் மீது கடும் நடவடிக்கையாம்

(கொழும்பு)

தென்மாகாண சபையில் ஐ. தே. க. தோல்வியின் பின்பு ஜனாதிபதி விஜேதுங்காவை பகிரங்கமாக விமர்சித்துக் கண்டித்தும் பேசிய ஐ. தே. க. உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கைமேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு மந்திரிமார் உட்பட எம்.பி.க்களின் பெயர்கள் நடவடிக்கை பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதியின் பிரத்தியேக காரியதரிசி திரு. பி. டபிள்யூ. விக்சேன கடுமையாக பேசியதற்காக வடமேல் மாகாண அமைச்சர் நுவலை ஜனாதிபதி விஜேதுங்க ராஜினாமா செய்யுமாறு உத்தரவிட்டதாகவும் பின்பு அவ் அமைச்சர் மன்னிப்பு கேட்டதன் பேரில் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (கே-வி)

வெளியுறவுச் செயலர்

பேர்னட் திலகரட்ண ஓய்வு பெறுகிறார்?

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர் திரு. பேர்னாட் திலகரட்ண தமது பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் பதவியிலிருந்து உடனடியாக ஓய்வுபெற வேண்டாமென்றும் பதவியை தொடருமாறும் ஜனாதிபதி விஜேதுங்க திரு. பேர்னாட் திலகரட்ணவைகேட்டுள்ளார்.

இதேவேளை கடந்த மார்ச் மாதத்துடன் தனது பதவியிலிருந்து ஓய்வுபெறும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் [illegible] நெவில் கனகரத்னவுக்கும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. - வி

ஐ. தே. க. தலைமைப் பதவிலிருந்து

'கலீல்' நீக்கப்படவுள்ளார்

(கொழும்பு)

ஐ. தே. க. வின் தலைவர்களில் ஒருவரான கலாநிதி எம். சி. எம். கலீல் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளை கட்சியின் செயலர் பதவியிலிருந்து ராஜினாமா செய்த அமைச்சர் சிறிசேன கூரே அமைச்சர் பதவியிலிருந்தும் நீக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது. விரைவில் மாற்றியமைக்கப்படவுள்ள அமைச்சரவை மாற்றத்தில் இது இடம்பெறலாமெனவும் கூறப்படுகிறது.

அமைச்சரவை மாற்றத்தின் போது பலரது அமைச்சர் பதவிகள் மாற்றப்படலாமெனவும் கூறப்படுகிறது. விரைவில் கூடவுள்ள ஐ. தே. க. வின் செயற்குழு கட்சித் தலைவருக்கும், கட்சி செயலருக்கும் கூடிய அதிகாரங்களை நிறைவேற்றும் அதிகாரம் வழங்கவுள்ளதாம்.

காமினி திஸநாயக்காவையும், திரு. காமினி ஜெயவிக்கிரம பெரேராவையும் எம். பி. ஆக்குவதன் மூலம் கட்சியை மீளமைப்பு செய்யவும் ஜனாதிபதி விஜேதுங்க திட்டமிட்டுள்ளார். -வி

பூட்டான் இளவரசிக்கு

தாய்வானில் சிறை

(லண்டன்)

பூட்டான் நாட்டு இளவரசிக்கு தாய்வான் நாட்டு நீதிமன்றம் 10 மாத சிறைத் தண்டனை வழங்கியுள்ளது

பூட்டான் நாட்டு இளவரசி டெசெ டெகி வாங்சுக் (வயது 43) அண்மையில் தாய்வானுக்கு உல்லாசப்பயணம் மேற்கொண்டு விமானமூலம் அங்கு சென்றார்.

விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் இளவரசியாரின் பொதிகளை சோதனை செய்த போது ஒரு பொதியினுள் பல லட்சம் ரூபா பெறுமதியான 22 காண்டா மிருகக் கொம்புகளும், 9 கரடிப் பித்தப் பைகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்தனர்.

இந்தக் கடத்தல் சம்பந்தமாக தாய்வான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது நீதிமன்றம் இளவரசியை குற்றவாளியாக் கண்டு 10 மாத சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இதன்படி இளவரசியார் தற்போது சிறையில் வாடுகின்றார். வி-வி

பாஸ்கரலிங்கத்திற்கு

அறுவை சிகிச்சை

(கொழும்பு)

நிதி அமைச்சின் செயலர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் அறுவைச் சிகிச்சைக்காக கடந்த வாரம் சிங்கப்பூர் சென்றுள்ளார்.

இதனால் அடுத்தசில மாதங்களுக்கு அவர் நாடு திரும்பமாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சிகிச்சையின் பின் ஓய்வு பெறுவதற்காக அவர் தொடர்ந்தும் சில மாதங்களுக்கு சிங்கப்பூரில் தங்கியிருப்பார்.

திரு. பாஸ்கரலிங்கத்தின் நிதி அமைச்சின் செயலர் வேலைகளை தற்காலிகமாக கல்வி அமைச்சின் செயலர் திரு. விஜேசேகரவும், கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலர் வேலைகளை தற்காலிகமாக தபால் தொலைதொடர்பு அமைச்சின் செயலர் திரு. அசோகா குணசேகரவும் கவனிப்பர். -வி

யுனிசெப் அன்பளிப்பு

(மானிப்பாய்)

யுனிசெப் நிறுவனம் 20 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை யாழ் மாநகரசபைப் பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது —வ-ச

மன்னார் மாவட்டத்தில் 23 பாடசாலைகள் இயங்கவில்லை

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் 23 பாடசாலைகள் முற்றாக இயங்காதுள்ளன; இப்பாடசாலைகள் சேதமடைந்தோ அல்லது அரச படைகளின் முகாம்களாகவோ உள்ளன.

இம்மாவட்டத்தில் மொத்தம் 230 ஆசிரிய வெற்றிடம் நீண்ட காலமாகவே உள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

இன்று

(அரியாலை)

திருநெல்வேலி சிவன் கோவிலில் இன்று 5ம் திகதி மாலை 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட கைலாச வாகனத்தில் சிவபெருமான் வீதிஉலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. -59

* *

(அரியாலை)

தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தால் இன்று வியாழக்கிழமை மாலை 3 00 மணிக்கு 'யாழ்ப்பாணத்து தமிழ் கிறிஸ்தவ கவிஞர்கள்' என்ற நூலும் '[illegible]' என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. -59

பரதநாட்டிய அரங்கேற்றம்

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இளம் கலைஞர் மண்டபத்தில் பரதநாட்டிய நிகழ்ச்சி ஒன்று அண்மையில் அரங்கேறியது. (அதுதான் செல்வி ஜனீந்திரா சோமசுந்தரத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம்)

புஸ்பாஞ்சலியுடன் ஆரம்பமான பரதநாட்டியம் ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதம், கீர்த்தனை, தில்லானா, மங்களம்வரை ஒவ்வொரு நிகழ்ச்சிலும் செல்வி ஜனீந்திராவின் ஆடல் அபிநயம் சுவையும் அழகும், தாள லய சுத்தம் மற்றும் பக்தி, அடக்கம், அமைதி, கலைத்திறன் அடவுகளை சாதுர்யமாக கோர்த்தெடுக்கும் லாவண்யம் அத்தனையும் செறிந்திருந்தது.

"ஆபோகி" ராகத்தில் அமைந்த பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் சாகித்தியமான "பக்திச் சிறகடித்து வானில்" என்ற பாடலுக்கு ஜனீந்திரா அபிநயத்துடன் ஆடியபோது இசைக் காட்சிகள் மிகவும் தத்ரூபமாக அமைந்திருந்தது.

நாட்டிய அரங்கேற்றத்தின் நட்டுவாங்கம் செய்த (செல்வி ஜனீந்திராவின் குரு) திருமதி கிஷாந்தி இரவீந்திரா [illegible] (இராமநாதன் நுண்கலைப் பீடம் யாழ். பல்கலைக்கழகம்) தமிழீழம் பெருமைப்பட வேண்டிய கலைஞர். அவரது கைத்திறன் நட்டுவாங்க ஆற்றல், பரதம் கற்பிக்கும் திறன், மேடைநிர்வாக ஒழுங்குகள் அவரது குருவாக அமைந்த அடையாறு லட்சுமணன், அமரர் ஏரம்பு சுப்பையா ஆகியோரையே நினைவு கூரும் வகையில் அமைந்திருந்தது.

கிருஷாந்தி ரவீந்திராவுடன் பின்னணிக் கலைஞர்களாக பாடல்: செல்வி. சுந்தரவிம்பம், மிருதங்கம்: திரு. எஸ். மகேந்திரன், வயலின்: செல்வி [illegible] நடராசா, [illegible]: இசை அமைப்பாளர்: திரு. முகுந்தன் இணைந்திருந்தனர். செல்வி ஜனீந்திராவின் நாட்டிய அரங்கேற்றம், தெய்வீக கலையம்சமும் பரதக்கலை என்றும் ஒரு ஒளியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ரோகிணி

திருவிழா

(அரியாலை)

கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் எதிர்வரும் 13 ம் திகதி வெள்ளிக்கிழமை புனித பத்திமாவின் திருவிழாவைக் கொண்டாடுகின்றனர்.

பண்டத்தரிப்பு புனித பத்திமா மாதா ஆலயத்திலும் திருவிழா நடைபெறவுள்ளது.

வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான கொடியேற்றம் இம்மாதம் 7ம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

தேர்த்திருவிழா இம்மாதம் 23 ம் திகதி திங்கள்கிழமையும், தீர்த்தத்திருவிழா 24 ம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளது. ம

வாழைப்பழம் விலை உயர்வு

(அரியாலை)

யாழ். திருநெல்வேலி, குருநகர், கல்வியங்காடு சந்தைகளில் வாழைப்பழம் தற்பொழுது கிலோ 40 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. [illegible] சந்தையில் கிலோ 30 ரூபாவாக விற்கப்படுகின்றது. -59

4 புலிகளைத் தேடி

கொழும்பில் தேடுதல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்படும் நால்வரைத் தேடி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குற்றப்புலனாய்வு பிரிவினர் தேடுதல் நடாத்தி வருகிறார்களாம்.

கொழும்பு குண்டுவெடிப்புகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகவும் கல்கிசை குண்டுவெடிப்பில் உயிரிழந்த அக்போசல் அன்ரன் அருள்தாசுடன் இவர்களும் கொழும்புக்கு வந்ததாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

கல்கிசை குண்டுவெடிப்பில் காயமடைந்த மகேந்திரன் மதிவாணன் கொடுத்த வாக்குமூலத்திலிருந்தே இந்த நால்வர் குறித்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம். தற்போதும் இவர்கள் கொழும்பில் அல்லது அதன் சுற்றுப்புறங்களில் எங்காவது தங்கியிருக்கவேண்டுமெனவும் குற்றப் புலனாய்வுப்பிரிவினர் கருதுகின்றனராம்.

மேலும் அருள்தாஸ் பற்றி மேலதிக விபரங்களை பெறுவதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கனேடிய பொலிசாருடன் தொடர்பு கொண்டுள்ளனர். -வி

யாழ்ப்பாணம்

மணிவாக்கு

கடவுளிடம் நம்பிக்கையும் மனசக்தியும் உடையவனே சாதம் கொள்ள இயலும்.
- காந்தியடிகள்

நமது நோக்கு

சுருதி மாற்றமா?

இலங்கையில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே என்று அடித்துக் கூறி, உரக்கப் பாடிய ஜனாதிபதியின் சுருதி மாறி வருகிறது. அண்மைக் காலப் பேச்சுகளாலும், நடவடிக்கைகளாலும் இப்படி யூகிக்கிறார்கள் அரசியல் அவதானிகள்!

தென்மாகாண சபைத் தேர்தலில் விழுந்த பலத்த அடியால், உட்கட்சிப் பூசல் பூதாகரமாக வெடித்துள்ள நிலையில், பாடிக் கொண்டிருந்த சுருதியிலேயே பாடிக் கொண்டிருந்தால் படுதோல்வி நிச்சயம் என்பதால் சுருதி மாறுகிறது. இது தெளிவாகத் தெரிகிறது.

தொண்டமானை அழைத்து பேசியதுடன் மலையகத் தமிழர்களின் வாக்குகளை வசீகரிக்க முயன்றிருக்கிறார்.

எழுதுவினைஞர் சேவைச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார் ஜனாதிபதி.

வடகிழக்குப் பிரச்சினையின் தீர்வில்தான் இலங்கையின் எதிர்காலமே தங்கியுள்ளது எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

தற்போதுதான் எதிர்காலம் பற்றிய எண்ணம் தோன்றியிருக்கிறது. எனவே தேர்தல் நிழலாட்டத்தில் சுருதிபேதம் ஏற்பட்டிருக்கிறதா?

இதைவிட, இப்பிரச்சினையை இன, மத, மொழி வேறுபாடின்றி தீர்வு காண அனைவரும் முயல வேண்டும் எனப் புதிய சுருதியில் அப்பொழுது அழைப்பு விடுத்திருக்கிறார்.

இனப்பிரச்சினையே இல்லை என்றவர், அப்படி ஒரு பிரச்சினை இருப்பதாக ஒப்புக் கொண்டதே பெரும் காரியம்!

சோழியன் குடுமி சும்மா ஆடுமா?

இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிச் சந்திரிகா வெளியிட்டுவரும் கருத்துக்கள் சிறுபான்மையினரைக் கவர்ந்து இழுக்கின்றதைக் கண்டவர், தனது நிலைப்பாட்டால் தோல்வியுற வேண்டிவரும் என்பதை ஜனாதிபதி உணர்ந்துள்ளாரா?

அது மாத்திரமல்ல, வடகிழக்கில் அமைதி கொண்டுவரத் திறமை போன்ற காரணங்களைக் காட்டி நம்பிக்கையில்லாப் பிரேரணை வரை தந்திருப்பது வந்துள்ளதல்லவா?

இதனை முறியடிக்க, புதிய சுருதியிற் பாடித்தான் ஆக வேண்டியிருக்கிறது!

புதிய அணுகுமுறை வரவேற்கப்பட வேண்டியதே!

கிழக்கில் தனிநாடு கோரும் முஸ்லிம் அமைப்பு உதயம்?

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கென தனி நாடு கோரும் ஒரு இயக்கம் தோன்றியுள்ளதாக 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கில் படையினர் போராளிகளை வெற்றி கொள்ள முடியாதிருக்கும் இந்த நேரத்தில் இப்படி ஒரு சவாலும் தோன்றியுள்ளது.

ஆரம்பத்தில் வியாபாரத்தை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த இந்த முஸ்லிம் மக்கள், இப்பொழுது நாட்டில் இஸ்லாத்தை கட்டியெழுப்புவதற்கும் அதிகாரங்களை பெறுவதற்கும் போராடுகிறார்கள். பூர்வகாலத்தில் பௌத்த அரசுகளாக இருந்த இந்தோனேஷியா பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இன்று பௌத்த மதம் இல்லை. இந்த இயக்கத்தின் தலைமையகம் கொழும்பில் இயங்குகின்றது. இதை பௌத்த மதத் தலைவர்கள் எச்சரித்தும் வருகின்றார்கள்.

இஸ்லாமின் அடிப்படைவாதத்தைப் பற்றிப் பேசும் இவர்கள் இப்பொழுது நாட்டின் ஒரு பகுதியை கேட்பதற்கு ஆயத்தமாகிறார்கள். கடந்த ஏப்ரல் 16ம் திகதி படையினரால் கைதுசெய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர்களை விசாரித்ததில் இந்த உண்மைகள் புலப்பட்டது. மட்டக்களப்பு பூனொச்சி கடற்கரைப் பகுதியில் வீடியோ காட்சிகளுடன் உலாவிய இவர்கள், அங்கு ஒரு இடத்துக்கு தீ வைத்தார்கள். அந்த நாசவேலையில் ஈடுபட்ட அவர்களை கைது செய்தபோது, அவர்களிடம் கைக்குண்டுகளும், வெடிக்க வைப்பதற்குரிய சாதனங்களும் கைப்பற்றப்பட்டன. இவர்கள் பற்றி படையினர் விசாரித்து வருகின்றார்கள்.

ஒரு பக்கத்தில் புலிகள் அநுராதபுரம் வரைக்கும் தனிநாடு கேட்கிறார்கள். முஸ்லிம்கள் இன்னொரு பக்கத்தில் ஒரு பகுதியை கேட்டிருக்கிறார்கள். தொண்டமான் மலையகத்தை கைப்பற்றுகிறார். இந்த நாட்டுக்கு உரித்தான சிங்களவர்கள் கடலில் பாயும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இந்த முஸ்லிம் இளைஞர்களுக்கு எப்படி ஆயுதங்கள் கிடைக்கின்றன. அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட கிரனைட் கைக்குண்டுகள், கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கைக்குண்டுகள் ஈரான் வழியாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் அப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ம-சி

ஐந்து வருடத்தில் மட்டும் 12,000 படையினர் ஓட்டம்

(கொழும்பு)

கடந்த ஐந்து வருடங்களில் 12,000 க்கும் மேற்பட்ட படையினர் இராணுவத்தைவிட்டு ஓடிச் சென்றுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் படையைவிட்டு விலகிச் சென்றதற்குரிய காரணங்கள் பற்றி இராணுவத் தளபதி படை அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறியுள்ளதோடு இவர்களை எப்படித் தேடிக் கண்டுபிடிக்கலாம் என்று அவர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 17,000 படையினர் தமது சேவையிலிருந்து தப்பியோடியதாகவும் இவர்களில் சிலநூறு பேரே பின்னர் பிடிபட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

இவர்களை தேடிக்கண்டு பிடிக்க இராணுவத்தில் விசேட படைப்பிரிவுகள் அமைக்கப்படுமென. ம-சி

மக்கள் சேவையில் அரசு ஈடுபடவில்லை

(கொழும்பு)

மக்களுக்கு சேவை செய்வதே அரசு உள்ளதாக வெளியில் சொல்லிக்கொண்டாலும் சில நடவடிக்கைகளில் அப்படியான செயற்பாட்டில் அரசு செயல்படுவதாக இல்லை என உபசபாநாயகர் காமினி பொன்சேகா குறைபட்டுக்கொண்டார்.

ஒரு விடயம் சம்பந்தமாக ஒரு அமைச்சுக்கு தான் 27 கடிதங்கள் எழுதியதாகவும் சற்றில் 27ஆவது கடிதத்திற்கே பதில் கிடைத்ததாகவும் திரு. காமினி பொன்சேகா இதற்கு உதாரணம் ஒன்று எடுத்துக் கூறியுள்ளார்.

அவர் மனிதாயத்தில் நடந்த ஒரு சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஏற்கனவே தென்பகுதி அபிவிருத்தி குறித்து சமர்ப்பித்த திட்டங்களில் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை எனவும் அவையாவும் புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகவும் இந்நிலையில் எவ்வாறு தென்பகுதி மக்களிடம் ஐ.தே. கட்சிக்கு வாக்களியுங்கள் எனக் கேட்பது எனவும் கேள்வி எழுப்பினார். —ஜே-சி

அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ் மத்திய கல்லூரியின் விசேட ஏழை சுதுமலை தெற்கு திரு. பொ. இராசலிங்கம் என்பவருக்கு முச்சக்கர சைக்கிள் ஒன்றை அன்னையின் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. -154

இராசி பலன்

05- 05 1994
வியாழக்கிழமை
(தமிழுக்கு சித்திரை 22)

தசமி பி. ப. 2-26 வரை. சதயம் ந. ப. 12-41 வரை மரணயோகம், இராகுகாலம் பகல் 1-26 முதல் 2-56 வரை. சுபநேரம் காலை 7-26 முதல் 8-56 வரை.

மேடம்: பெரியோர் அறிவுரை, பயண அனுகூலம், நற்பெருமை.

இடபம்: முயற்சி பலிதம், சமயோசித அறிவு, கடமை உணர்வு.

மிதுனம்: குடும்ப உறவில் வேற்றுமை, மனச்சுமை, பயனற்ற செலவு.

கடகம்: உற்சாகமின்மை, வீண்விரோதம், அநாவசிய செலவு.

சிம்மம்: முதியோர் உதவி, தொழில் வருவாய், காரிய சித்தி.

கன்னி: மனைவி பெருமை, காரியம், தெய்வீகப்பணி.

துலாம்: மனக்குரோதம், ஆவேச உணர்வு, சகோதர வெறுப்பு.

விருச்சிகம்: இடம்பெயர்தல், தொழில் நஷ்டம், அலைச்சல்.

தனுசு: மகிழ்ச்சியான சம்பவம், வருத்தமேதும், குடும்ப சுகம்.

மகரம்: பிறர் ஏவலம், குடும்ப வாதம், இனசன தொல்லை.

கும்பம்: அதிகாரம் ஏமாற்றத்தின் பின் உதவி, சுபசெய்தி.

மீனம்: பழிதீர்த்தல், மனவெறுப்பு, தொழில்விரோதம்.

ஜோஸ்யர்

அமைச்சரவை கூட்டமும் ஜனாதிபதிமாரும்

(கொழும்பு)

ஜே. ஆர். ஜெயவர்தன ஜனாதிபதியாக இருந்த 10 வருட காலத்திலும் அமைச்சரவை கூட்டம் நீண்டநேரம் நடைபெறும். 5 மணித்தியாலங்களும் சிலவேளை விவாதம் நடைபெறும். இவைகளை அமைதியாக இருந்து கேட்பார் ஜே. ஆர். சுற்றில் அவரே எதற்கும் இறுதித் தீர்மானம் எடுப்பார். ஆனால் அமைச்சரவையின் முழு அங்கீகாரத்துடன்தான் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதாக வெளியில் நம்பப்பட்டது.

அடுத்து பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்தவேளை அமைச்சரவை கூட்டம் சில மணித்தியாலம் 'மாத்திரம்' நடைபெறும். ஆனால் இதில் நீண்டநேரம் பேசுபவர் திரு. பிரேமதாசாவாகவே இருந்தது.

ஆனால் திரு. டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதியாக பதவியேற்றபின் அமைச்சரவைக் கூட்டம் ஒரு மணித்தியாலத்திற்கு மேற்படவில்லை. 45 நிமிடங்களிலேயே கருமங்கள் முடிந்துவிடும். கடந்த ஒருவருட காலமாக இதேநிலைதான் நிலவுகிறது. இவரது அமைச்சரவை கூட்டங்களில் விவாதங்கள் அதிகம் இடம் பெறுவதில்லை முக்கிய காரணமென தெரிவிக்கப்படுகிறது. -ஜே-சி

வன வளம் இல்லையேல் மழை வளம் இல்லை

நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

இன்று கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் மதியம் 12-00 மணிவரையில் வரவும். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார். -சி

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-5-5 வியாழன் இரவு
8-01- சொல்லுங்கள் பார்க்கலாம்.
8-10- உரை- உலகப் பெண்ணினம்.
8-20- உழைப்போம் உயர்வோம். 'ஏழைகளின் பசு மித்திரம்'
8-30- செய்திகள்
8-40- புதிய தமிழ் புலிகள் என்ற அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி.
8-50- மலரும் மொட்டுக்கள்.

1994-5-6 வெள்ளி காலை
7-02- மாவீரர் வணக்கம்.
7-15- விடுதலை கானங்கள்.
7-30- செய்திகள்
7-35- பத்திரிகைச் செய்திகள்.
7-40- தொடர்ந்து விடுதலை கானங்கள்.

படை நடவடிக்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் இதற்காக படையினரும் இராணுவ தளபாடங்களும் குவிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ தரப்பு செய்திகள் கூறுகின்றன. -சி

பூநகரி தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பகுதியில் ரோந்து சென்ற படையினருக்கும் புலிகளுக்குமிடையில் கடந்த திங்கள் இரவு சில நிமிட நேரம் கடும் மோதல் நடைபெற்றதாகவும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். -சி

இராணுவ தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னை புலிகளின் இந்த தாக்குதல் திட்டமிடல்களை நடவடிக்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் இதனைப்புலிகள் தங்களை பலப்படுத்தியுள்ளதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

கேற்பது செய்தி குறித்து படையினர் தற்போது உள்ளக விசாரணைகளை நடாத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. ம-சி

ஒழுக்காற்று

(1- ம்பக்கத் தொடர்ச்சி)

களுக்கு எதிராக தண்டனைக்கு எச்சரித்துள்ளனர்.

கட்சியின் கோட்பாடுகளை மீறியதற்காக இரண்டு அமைச்சர்கள் மீதும் ஏழு மாகாண உறுப்பினர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் முன்பு தீர்மானித்திருந்தன.

இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சரும், கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த பிரதி அமைச்சர் ஒருவர் மற்றும் களுத்துறை, மாத்தறை, காலி மாவட்டங்களைச் சேர்ந்த சில முக்கிய எம். பி.க்களுக்கும் எதிராகவே இந்த நடவடிக்கைகளாம்.

இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலாளர் சிறிசேன கூரேயின் நெருங்கிய ஆதரவாளர்கள் என்றும் அறியப்படுகின்றது. -மதி-

அரசியல்படுகொலைகளுக்கு ஐ.தே.க. அரசே காரணமாம்

(கொழும்பு)

கடந்த காலங்களில் இடம்பெற்ற அரசியற் கொலைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசுதான் பொறுப்பு என்று ஒரு சிங்கள வாரப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

கொலைகளைப் புரிந்துவிட்டு ஜே.வி.பி., புலிகள் மீது பழியைச் சுமத்தி, இந்த அரசியல் கொலைகளில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி அரசு தப்பித்துள்ளது என்றும் அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.

லலித் அத்துலத்முதலி, பிரேமதாஸா போன்றோரின் கொலைகளுக்கும் ஐக்கிய தேசியக்கட்சியே பின்னணியில் இருந்துள்ளது. இது பற்றிய உண்மைத் தகவல்கள் அண்மையில் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ராஜினாமா செய்த சிறிசேன கூரே மூலம் வெளிவரலாம் என்றும் அந்தப் பத்திரிகை கூறியுள்ளது. ம-இ

கூரே, பிரேமா ஆதரவாளர்கள் ராஜினாமா

(கொழும்பு)

அமைச்சர் சிறிசேன கூரே, மற்றும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் நெருங்கிய ஆதரவாளர்கள் பலர் அரசாங்க நிறுவனங்களிலிருந்து ராஜினாமா செய்து வருகிறார்களாம்.

தற்போது எழுந்துள்ள அரசியல் சூழ்நிலையை அடுத்தே இவர்கள் தாம் வகிக்கும் முக்கிய பதவிகளிலிருந்து விலகி வருகிறார்களாம்.

ஜனாதிபதி விஜயதுங்கவின் எதிரிகளின் ஆதரவாளர்களை பழிவாங்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதால் அவர்கள் தாங்களாகவே இதிலிருந்து ஒதுங்கிக் கொள்வதாகவும் கூறப்படுகிறது. ம-இ

சுவிஸிலிருந்து தமிழ் அகதிகள் வேறு நாடுகளுக்கு தப்ப முயற்சி

(சூரிச்)

சுவிஸிலிருந்து இலங்கை தமிழ் அகதிகள் பலர் அயல் நாடுகளுக்கு களவாக தப்பிச் செல்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

அடுத்த சில வாரங்களில் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்காக பெயர்கள் பதியப்பட்ட தமிழர்களே இவ்வாறு தப்பிச் செல்வதாகவும் பலர் பிடிபட்டு தடுப்புமுகாம்களில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வருவதைவிட வேறுஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதே மேல் என்றே இவர்கள் அயல் நாடுகளுக்கு பலத்த சிரமத்தின் மத்தியில் தப்பிச் செல்ல முனைவதாகவும் தமிழ் அகதிகள் மீது பொலிஸாரின் கண்காணிப்பு தீவிரமடுத்தப் படுகின்றதாகவும் எப்படியும் தமிழ் அகதிகளை அனுப்புவது என சுவிஸ் அரசு இருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. -இ

7-ம் திகதி சனி மகாபொல உயர்கல்வி பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

1992/1993ம் ஆண்டிற்கான மகாபொல உயர் கல்விப் புலமை பரிசளிப்பு வைபவம், யாழ். பல்கலைக்கழக திறந்த கைலாசபதி கலையரங்கில் 7ம் திகதி சனிக்கிழமை 9-00 மணிக்கு நடைபெறும். புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் அன்றைய தினம் காலை 8-00 மணிக்கு தமது அடையாள அட்டை அல்லது பல்கலைக்கழகப் பதிவு அட்டையுடன் சமுகமளிக்கும்படியும், அவர்களின் பெற்றோர் 9-00 மணிக்குச் சமுகமளிக்கும்படியும் வேண்டப்படுகின்றனர்.

மகாபொல பரிசு பெறும் மாணவர்களுக்கான அழைப்பிதழ்களையும், கொடுப்பனவு பற்றிய விபரம் அடங்கிய பத்திரங்களையும் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்து மாணவர்கள் இன்று முதல் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

இவ்வைபவத்தில் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் சான்றிதழும், காசோலையும் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரினால் வழங்கப்படும். 162-இ

★ இன்று ஆரம்பம் பல்கலை. அனுமதி பெற்ற மாணவருக்கு ஆங்கில வகுப்பு

(யாழ்ப்பாணம்)

94/95 கல்வி ஆண்டு பல்கலைக் கழகங்களில் கல்வி பயில தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான 'GELT' ஆங்கில வகுப்புகள் இன்று ஆரம்பமாகின்றன.

பல்கலைக் கழகங்களில் கல்வி பயில தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் கிடைக்காதவிடத்தும் ஒவ்வொரு மாவட்டத்திற்கென தீர்மானிக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்ற அனைத்து மாணவர்களும் தங்கள் தகைமைகளை நிரூபிக்கக் கூடிய சான்றுகளுடன் இன்று மாலை 2-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரிக்கு சமுகமளிக்கவும்.

அத்தோடு சென்றவருடம் இவ்வகுப்புகளை நடாத்துவதற்கு விண்ணப்பங்களை கையளித்த சகல ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்குமாறும் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். -இ

மரண அறிவித்தல்

சபாரத்தினம் சபாலிங்கம்

01-05-1994 அன்று சபாரத்தினம் சபாலிங்கம் பிரான்சில் அகால மரணமானார். அன்னார் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் ச. சபாரத்தினம் திருமதி மகேஸ்வரி சபாரத்தினம் தம்பதிகளின் அன்புமகனும் திருமதி தாரநிதி (சோமதி) யின் அன்புக்கணவரும் சபாசேனனின் தந்தையும் சபாநந்தன் (A C M A Financial Controler Retures) சபாரஞ்சன் (M B B S, D M. F R C S Edin) F R C S (Eng) FICA) சபாநேசன் MSC Civil Engineer) சபாஈசன் (A. A. T.) சபாநிரஞ்சன் திருமதி கௌரி சந்திரஞானதாசன், திருமதி சாந்தி இரத்தினமோகன் திருமதி சுமதி சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:

திருமதி. சபாரத்தினம் மகேஸ்வரி

(தாயார்)

அக்கடை ஒழுங்கை,
தழையாழி, கொக்குவில். (இ-1003)

ஐ.தே.க. விரைவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய கட்சிகளை பிளவுற பல சதிகளை செய்து வந்த ஐ.தே.க. இன்று அதே சதிக்குள் சிக்கி பல பிளவுகளாக பிளவுறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. ஐ.தே.க.வின் அஸ்தமனம் ஆரம்பித்துவிட்டது. எனவும் பொதுசன ஐக்கிய முன்னணி கூறியுள்ளது. -இ

ஐ.தே. க. எம்.பி.க்களிடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடிதங்களை சகல எம். பிக்களிடமிருந்தும் பெறவுள்ளாராம்.

முன்பும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், திரு. பிரேமதாஸாவும் இவ்வாறு திகதி குறிப்பிடப்படாத ராஜினாமா கடிதங்களை பெற்றிருந்ததும் இதன் மூலம் கட்சி கட்டுப்பாட்டை பிரயோகித்ததும் குறிப்பிடத்தக்கது.

கட்சிகளுள் எழுந்துள்ள நெருக்கடிகளை சமாளிக்க திரு. விஜயதுங்கவும் இந்த வழியை பின்பற்ற ஆரம்பித்துள்ளாராம். ம-இ

சண்டே ஒப்சேவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரின் அண்மையில் லங்கா சாடியானில் வெளியான ஜனாதிபதி விஜயதுங்காவை கண்டிக்கும் கட்டுரை ஒன்று மறுபிரசுரம் செய்யப்பட்டது இதையடுத்து பெரும் சர்ச்சை எழுந்தது.

இதனால் லேக்கவுஸ் நிறுவனத்திற்கு புதிய தலைவர் ஒருவரை நியமிக்கவும் சண்டே ஒப்சேவருக்கு புதிய ஆசிரியரை நியமிக்கவும் ஜனாதிபதி விஜயதுங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார். இதையடுத்தே மேற்படி இருவரும் தமது ராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்துள்ளனராம்.

திரு. கனிசெருபதிக்கோ ஜனாதிபதியை சந்தித்த போது சொந்தக் காரணங்களுக்காக பதவியிலிருந்து விலகுவதாகவே கூறினார். லேக்கவுஸின் புதிய தலைவராக தற்போது மத்திய மாகாண சபையின் டி. யு. என். எவ் உறுப்பினர் திரு. சரத்அமுனுகம நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் திரு.விஜய தங்கா தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்தபோது திரு. அமுனுகம அமைச்சின் செயலராக இருந்தவர். இவர் திரு. காமினி திஸாநாயக்காவின் நெருங்கிய ஆதரவாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பதவிவிலகிய இருவரும் திரு. சிறிசேனகூரேயின் ஆதரவாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. -இ

அமைச்சரவையிலிருந்து 'டி.பி.'யின் எதிரிகள் நீக்கம்?

(கொழும்பு)

அமைச்சரவை மாற்றத்தின் போது ஜனாதிபதியின் எதிரிகள் எனக் கருதப்படுவோர் அமைச்சர் பதவிகளை இழப்பர் என 'சண்டே ஐலண்ட்' தெரிவித்துள்ளது.

நீக்கப்படுவோரின் இடத்திற்கு டி. பி.யின் நெருங்கிய சகாக்கள் நியமிக்கப்படுவர். ஆறுக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் பதவி இழக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

காமினி திஸநாயக்காவுக்கு பாதுகாப்பு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. காமினியை அமைச்சரவைக்குள் புகுத்தவும், தமது எதிரிகளை அமைச்சரவையிலிருந்து நீக்கவுமே, அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி விஜேதுங்க மேற்கொள்ள இருப்பதாகவும் கூறப்படுகிறது. -இ

புதிதாக 18 பேருக்கு பதவி நியமனங்கள்

(யாழ்ப்பாணம்)

1993 இல் நடைபெற்ற போட்டிப்பரீட்சையின் பெறுபேறுகளின்படி 2-05-1994 ஆம் திகதிமுதல் நியமனம் பெறும் எழுதுவினைஞர்கள், சிறாப்பர், தமிழ் ஆங்கில தட்டெழுத்தாளர், சிற்றூழியர் விபரம் வருமாறு:

எழுதுவினைஞர்: ஆர். பத்மராஜன். புலோலி தெற்கு, புலோலி. ஆர். பத்மாவதி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், பீ. சுமங்கலாதேவி, மூளாய், சுழிபுரம், பீ. தவமணி, சூராவத்தை, சுன்னாகம்.

கணக்குப்பதிவுநர்: செல்வி பீ. டேவிட், சூராவத்தை, சுன்னாகம்.

சிறாப்பர்: எஸ். என். சேதீஸ்வரன், இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். ஆர். சிவதேவி, குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளை. கே. சிவநிதி. ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

தட்டெழுத்தாளர் (தமிழ்) ரீ. கணேசமூர்த்தி சரவணை கிழக்கு, வேலணை. திருமதி ஜீ. சாந்தராஜா, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) செல்வி எஸ். ஜீவரத்தினம், செங்குந்தா ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு. செல்வி எஸ். பத்மநாதன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். செல்வி ஆர். தவராஜா. வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் செல்வி ஜே. தவகிலாயம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் செல்வி எஸ். ராஜரத்தினம், குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பளை.

சிற்றூழியர்: எம். திருநாவுக்கரசு, கச்சேரி நல்லூர் வீதி. யாழ்ப்பாணம். ஏ. சிவானந்தபிரகாசம். ஏழாலை வடக்கு, ஏழாலை வீ. திருப்பதிநாதன், நவாலி வடக்கு, மானிப்பாய்

மேற்படி இவர்களை யாழ்ப்பாணம் கச்சேரி நிர்வாக உத்தியோகத்தரிடமிருந்து நியமனக்கடிதங்களை உடனடியாகப் பெற்று 2-05-94 ம் திகதி முதல் அந்தந்த திணைக்களங்களில் பதவிகளைப் பொறுப்பேற்குமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (இ)

நிறுவனத்

1ம் பக்கத் தொடர்ச்சி

முயற்சியில் ஜனாதிபதி விஜயதுங்க ஈடுபட்டுவருவதால் பலத்த அதிருப்திகளும் எதிர்ப்புணர்வுகளும் கிளம்பியுள்ளதாம்.

வெவ்வேறு குழுக்கள் மலிந்திருக்கும் ஆளும் ஐ.தே.க.வினுள் ஜனாதிபதி விஜயதுங்க தற்போது தனதுபிடியை பலப்படுத்தியுள்ளதாகச் செய்திதாவல் அமைப்புகளிலும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இதர ஏனைய நிறுவனங்களிலும் மாற்றங்கள் ஏற்படுவது நிச்சயம் என நம்பப்படுகிறது. (இ)

தனது கைகள்

1ம் பக்கத் தொடர்ச்சி

யுள்ளார்.

தேர்தலில் கட்சிக்கு தோல்வி ஏற்படும் பட்சத்தில் தன்னிடம் இழக்க ஒன்றுமில்லையென்றும், தனது கைகள் என்றும் சுத்தமானவையாகவே இருப்பதாகவும் கூறிய ஜனாதிபதி, தோல்வி ஏற்படும் பட்சத்தில் அமைச்சர்களே கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டி வரும் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஐ.தே.க.வின் சட்டத்தை மீறி குற்றம் புரிவோரைக் களை எடுப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு வொன்றை நியமிக்க திரு. விஜேதுங்க ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆலோசனைக்கு பிரதமர் உட்பட பல அமைச்சர்களின் ஆதரவும் கிடைத்துள்ளது. மக்களை கவரும் எண்ணத்தில் ஜனாதிபதி இம்முயற்சியில் இறங்கியிருப்பதாகவும் ஆங்கில வார ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

(கே-இ)

சமரசப் பேச்சுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

வடபகுதிக்கு விஜயஞ் செய்த இந்தத் தமிழ் அதிகாரி விடுதலைப் புலிகள் இயக்கப் பிரிவின் பதில் தலைவர் கரிகாலன் தலைமையிலான குழுவுடன் 3-00 மணித்தியாலங்கள் பேச்சுக்கள் நடத்தியதாகவும், அதன்போது அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்த நாம் தயாராக இருக்கின்றோம் ஆனால் எம்முடன் பேச்சுக்கள் நடாத்துவதற்கு வரும் அரசப் பிரதிநிதிகள் தாங்களாகவே தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடியவர்களாக இருக்கவேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தி அந்த அதிகாரியிடம் கூறியதாகவும் கூறப்படுகின்றது. வி-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இல. 66-6 ஸ்ரான்லி வீதி, மேற்கு வீதி இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under license Number B/16336/B